பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 04செவ்வாய்க்கிழமை 18.03.2025 கதிர் 130

### இ னி து ரகசியம் அல்ல!

அனுராதபுரம்வைத்தியசாலையில் கடமை நேரத்தில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமை இலங்கையை உலுக்கியது. மருத்துவர்கள் ☞ 2

# பட்டலந்த அறிக்கைபோன்றே ஏனைய அறிக்கைகளையும்கூட சமர்ப்பியுங்கள்

## மக்கள் போராட்ட முன்னணி கோரிக்கை

பட்டலந்த வதை முகாம் பற்றிய அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததுபோல ஏனைய சித்திரவதைகள், படுகொலைகள் குறித்த அறிக்கைகளையும் குறிப்பாக தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகளையும் ஆளும்தரப்பினர் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கவேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணிக் கட்சியைச் சேர்ந்த ரஜீவ்காந் வலியுறுத்தியுள்ளார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது.

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை இன்றுநாட்டில்பேசுபொருளாக காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையைதான்நிராகரிக்கிறார்என்று ரணில்விக்கிரமசிங்க நாட்டு மக்களிற்கு அறிவித்திருக்கின்றார்.

இந்த பட்டலந்த வதை முகாமில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பான அந்த அறிக்கை சந்திரிகாவின் காலத்தில் தயார் செய்யப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத்திற்கு ☞ 8

# தமிழர்களுக்கு எதிரான அநீதிகளையும் பட்டலந்தபோல் வெளிக்கொண்டுவருக

## சிறீநேசன் எம்.பி. ஆளும்தரப்பிடம் வலியுறுத்து



பட்டலந்த சித்திரவதை முகாம் 37 வருடங்களுக்குப் பின்னர் வெளிவந்துள்ளது. இவ்வாறு வடக்கு கிழக்கில் இயங்கிய பல முகாம்களில் தமிழர்கள் படுகொலை மற்றும் சித்திரவதை செய்யப்பட் தமிழ்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தேசிய மக்கள் சக்தி வெளிக்கொண்டுவர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்தார். ☞ 2

# பட்டலந்த அறிக்கையையொட்டி மீள அமைதியின்மை ஏற்படலாம்

## ஐ.தே.க. தவிசாளர் எச்சரிக்கை

பட்டலந்தஆணைக்குழுஅறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் மீண்டும் அமைதியற்ற நிலைமை ஏற்படலாம். எனவே அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். ஆனால் இவ்விவகாரத்தில் ☞ 2

# குருந்தூர்மலை விவகாரத்தை ஆராய விசேட குழு நியமிப்பு

முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அங்கு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வரை குருந்தூர் மலையில் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மத தலங்கள், விகாரைகள் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் ☞ 2

# புதிய அரசமைப்புப் பணிகள் விட்டதிலிருந்தே தொடங்கும்

## அதனை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்கிறார் நீதி அமைச்சர் ஹர்ஷண



**புதிய அரசமைப்பு உருவாக்கத் துக்கான பணிகளை புதிதாக ஆரம்பிக்க போவதில்லை. இடைநிறுத் தப்பட்ட இடத்தில் இருந்தே தொடங்கு வோம். சிறந்த நிகழ்ச்சிநிரலுக்கு அமைவாகவே செயற்படுவோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய புதிய அரசியலமைப்பினை நிச்சயம் உருவாக்குவோம் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர்சட்டத்தரணிஹர்ஷண ☞ 2**

# அவசர அழைப்புக்கு 117

கல்விப் பொதுத் தாராதர சாதாரண தரப் பரீட்சை எழுதும்மாணவர்கள்சீரற்றகாலநிலையால்ஏற்படக்கூடிய இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டால் அது தொடர்பில் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பணிகளுக்காக விசேட குழுக்கள் தயார் நிலையிலுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சைதிணைக்களத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 3,663 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. மார்ச் 26 வரை இப்பரீட்சைகள் இடம்பெறும். எவ்வித பிரச்சினைகளும் இடையூறுகளும் இன்றி முதல் நாள் பரீட்சைகள் நிறைவடைந்துள்ளன. காலநிலையாலும் பிரச்சினைகளும் ஏற்படவில்லை.

அவசர தேவைகள் தொடர்பில் மெய்நிகர் ஊடாக சகல மாகாண கல்வி பணிப்பாளர்களையும் ☞ 2

# கொழும்பில் அனைத்து சபைகளிலும் ஐ.தே. கட்சி யானையில் போட்டி

கொழும்பு மாவட்டத்தில் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. சிலமாவட்டங்களில் வேறு கட்சிகளுடன் இணைந்து பொதுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மாவட்டத்தில் சகல உள்ளூராட்சிமன்றங்களிலும் ஐக்கிய தேசிய கட்சி யானை சின்னத்தில் போட்டி யிடவுள்ளது. பலமான குழுக்கள் தேர்தலில் ☞ 8

# பௌத்தத்துக்கு வழங்கும் மதிப்பை ஏனைய மதங்களுக்கும் வழங்குக

## சிறீநாத் எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை



பௌத்த மதத்துக்கு வழங்கும் மதிப்பை இந்து மதத்துக்கும், ஏனைய மதங்களுக்கும் வழங்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்று தொன்மைமிக்க ஆலயங்களைபுனரமைக்கவிசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்ஸ்ரீநாத் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

# கணேமுல்ல சஞ்சீவ கொலையில் சிறைச்சாலை அதிகாரியும் கைது

நீதிமன்றத்தின் உள்ளே சுட்டுக்கொல்லப்பட்ட கணேமுல்ல சஞ்சீவவின்பாதுகாப்பிற்குப்பொறுப்பாக இருந்தசிறைஅதிகாரிஒருவர்கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சஞ்சீவகொலைதொடர்பாகஇதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், நீதிமன்றத்தின் உள்ளே துப்பாக்கிச் சூடு நடத்திக் கொலை செய்தவர் எனச் சந்தேகிக்கப்படுபவரும் இதில் அடக்கம். கைதானவர்களில் இரண்டு ☞ 8

# தையிட்டி விகாரையையொட்டி உள்ள சட்டவிரோத குடியேறிகளை அகற்றுக

## பிரச்சினையை தீர்க்க குழுவும் வேண்டும் என்கிறார் பெரமுன எம்.பி.

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண ஆளும்தரப்பு விசேட குழுவொன்றை நியமிக்கவேண்டும்.விகாரையை அண்மித்தபகுதியில்வசிப்பவர்கள் உரிமம் கோருவதற்காக போலியான ஆவணங்களை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். அங்கு சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளவர்களை ☞ 8

## இனி இது .....

இந்தச் சம்பவத்திற்கு எதிராக உடனடியாகப் போராட்டத்தில் குதித்தனர். 24 மணி நேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். சந்தேகநபரைக் கைது செய்யவேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக இருந்தது. 48 மணி நேரத்திற்குள் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். அவர் இராணுவத்தின் முன்னாள் பணியாளர் என்கிற உண்மையும் அம்பலப்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் பெண்களின் பாதுகாப்புத் தொடர்பாக அதிலும் இரவுக் கடமைகளில் ஈடுபடும் பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகளையும் விவாதங்களையும் கிளப்பியுள்ளது. பெண் கிராம அலுவலர்கள் இரவில் கடமையாற்ற முடியாது என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். வைத்தியசாலைகளில் மருத்துவர்கள் தவிர பல பணிகளிலும் பெண்கள் இரவு நேரக் கடமைகளில் ஈடுபடுகின்றார்கள் அவர்களின் பாதுகாப்புக் குறித்த கரிசனைகளும் அதிகம் எழுப்பப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம் சம்பவம் இடம்பெற்றதற்கு மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார். அவரை இடம்மாற்றிவிட்டு வேறு ஒருவர் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார். மருத்துவமனையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவர் தவறிவிட்டதால் அவருக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வெளிப்பார்வைக்கு அவரே இந்த விடயத்தில் தவறிழைத்தவர் போலக் காட்டப்பட்டுள்ளார். ஆனால், வைத்தியசாலைகளில் உள்ள இந்த பரிதாபகரமான நிலைக்கு ஒட்டுமொத்த சுகாதாரத்துறை அதிகாரிகளும் சட்டம் ஒழுங்கு காவலர்களான பொலிஸாரும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

உதாரணத்திற்கு, அநுராதபுரம் சம்பவம் இடம்பெறுவதற்கு ஒரு மாதகாலத்திற்கு முன்பாக பளையில் கடமையாற்றும் பெண் மருத்துவர் ஒருவரும் இதுபோன்ற பயங்கரத்தை மிக நெருங்கிச் சென்று தப்பியுள்ளார். பளை மருத்துவமனையில் வைத்தியசாலையின் பின்புறமாக கொஞ்சம் தள்ளி தனியாகவே வைத்தியர்கள் தங்கும் விடுத்தி உள்ளது. வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் மருத்துவர் ஒருவர் இரவு நேரம் விடுதியில் இருந்தபோது யாரோ சிலர் விடுதிக் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைய முயன்றுள்ளார்கள் பயந்துபோன மருத்துவர் கூக்குரல் இட்டும் அலைபேசியில் அழைத்துத் தகவல் தெரிவித்தும் புத்திசாலித்தனத்தோடு நடந்துகொண்டதால், மற்றவர்கள் அந்த இடத்தை நோக்கி ஓடிவந்ததும் குற்றவாளிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச்சம்பவம் குறித்து பொலிஸாரிடமும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் இதுவரை எந்தவொரு சந்தேகநபரும் கைது செய்யப்படவும் இல்லை. விடுதியை ஒட்டிய பாதுகாப்பும் அதிகரிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. மக்களைப் பற்றியும் பணியாளர்களைப் பற்றியும் அக்கறையற்ற உயர் அதிகாரிகள் பதவியில் இருந்தால் நிலமை இப்படித்தான் இருக்குமோ என்னவோ!

இதைய ஏன் சொல்ல வேண்டி இருக்கிறது என்றால், யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள இதயநோய் மருத்துவ மையத்தில் (கிளினிக்) சிகிச்சை பெற வரும் மக்கள் இப்போதெல்லாம் வெளியில் இருக்கக்கூட இடமின்றி அந்தரப்பட்டு நிற்கும் நிலையைக் காணமுடிகின்றது. சிலகாலங்களுக்கு முன்னர் அப்படியில்லை. முன்னர் கட்டடத்தின் முதலாம் மாடியில் கிளினிக்கிற்கு வருபவர்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை. வயதானவர்களும் நோயாளிகளும் சுட்டெருக்கும் வெய்யிலின் மத்தியில் அந்தரப்பட்டு நிற்கிறார்கள். அவர்களைப் பார்த்து யாருக்கும் எந்தக் கவலையும் இல்லை. ஏன் இந்த அவலும் என்று விசாரித்தால், பதில் அதிர்ச்சியடைய வைக்கிறது.

முன்னர் வைத்தியசாலைக்கு வருவோர் காத்திருக்கவென ஒதுக்கப்பட்டிருந்த இடம் இப்போது நவீன வசதிகள் கொண்ட கழிப்பறையாக மாற்றப்பட்டிருக்கின்றதாம். மக்கள் அந்தரித்து நின்றாலும் பறவாயில்லை, அவர்கள் எக்கேடுகெட்டாலும் பறவாயில்லை, ஆனால் அங்கு ஒரு நவீன வசதிகள் கொண்ட கழிப்பறைவேண்டும் என்று அடம்பிடித்த மாகாண சுகாதார உயர் அதிகாரி ஒருவரின் பிடிவாதத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாம். தெற்கிலிருந்து வந்திருக்கக்கூடிய இந்த அதிகாரி, அங்கிருந்து வரும் தனது உறவினர்களும் நண்பர்களும் வசதியாகத் தங்குவதற்கு ஏற்றவாறு கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து இந்தக் கழிப்பறை வசதியை ஏற்படுத்திவிட்டு நோயாளர்கள் அந்தரிக்கும் அவலத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது.

இப்படி மக்களினதும் பணியாளர்களினதும் அவலமும், வேதனையும், சங்கடங்களும் புரியாது தமது வசதிகளும் சொகுசும் களியாட்டங்களுமே முக்கியம் என்று இருக்கும் அதிகாரிகள் உள்ளவரை அனுராதபுரம் போன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடப்பதைத் தவிர்க்க முடியாது. ஆளும்தரப்பு இதனைப் புரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், ''முறைமை மாற்றம்'' என்பது வெறும் கனவு மட்டுமே.

.இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## புதிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு விவாதத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிகளைக் கேட்டு எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கவில்லை. அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை கருத்திற்கொண்டு கொள்கைத் திட்டத்தை தயாரித்தோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங்கள் நிச்சயம் நிறைவேற்வோம். எமது கொள்கைத்திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுத்துத் தயாரித்தோமே தவிர, ஆறு மாதத்துக்குள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக எங்கும் குறிப்பிடவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப்பெறுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழல் மோசடி தடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் உட்பட அரச நிறுவனங்கள் சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸ்மா அதிபர் தலைமறைவாகியுள்ளார். ஏனைய ஆட்சிகளிலாயின் அவர் பாதுகாக்கப்பட்டிருப்பார். குற்றவாளிகளை பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

சிறந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை உரிய காலத்தில் முன்னெடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

புதிய யாப்பு உருவாக்கத்துக்கான பணிகளைப் புதிதாக ஆரம்பிக்கப்போவதில்லை. இடைநிறுத்தப்பட்ட இடத்திலிருந்தே ஆரம்பிப்போம். ஆகவே இவ்விடயத்தில் நாங்கள் அவசரப்படப் போவதில்லை. எதிர்க்கட்சிகளின் கலக்கத்துக்கு அமைய நாங்கள் செயற்படப்போவதில்லை - என்றார்.

## அவசர ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு கொண்டு நிலவரங்கள் தொடர்பில் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் தினங்களில் சீரற்ற காலநிலை ஏற்படும் பட்சத்தில் ஏதேனும் இயற்றை அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும் என சந்தேகிக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து இது குறித்து அறிவிக்க முடியும். அதற்கமைய தேவையான உதவிகளை வழங்குவதற்கு குழுக்கள் தயார் நிலையில் உள்ளன.

எவ்வாறிருப்பினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் அந்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

பரீட்சைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றால் 1911 என்ற பரீட்சை திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை பரீட்சாத்திகள் எவரேனும் முறையற்ற விதத்தில் நடந்துகொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## குருந்தூர்மலை .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தியுள்ளோம். இந்த பிரச்சினைகள் இன்று நேற்று தோற்றம் பெற்றவையல்ல, பல ஆண்டுகளுக்கு முன்னரே இந்தப் பிரச்சினைகள் தோற்றம் பெற்றன.

வலிகாமம் - வடக்கு பகுதியில் 3 திஸ்ஸ விகாரைகள் காணப்படுகின்றன. இதில் தையிட்டி திஸ்ஸ விகாரை காணியை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. வடக்கில் காணப்படும் இவ்வாறான பிரச்சினைக்கு நல்லிணக்கத்துடனும், பொறுமையுடனும் தீர்வு காணவேண்டும்.

தமிழ்மக்களைவெறுப்புகண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது. ஆகவே அவ்வாறான குற்றச்சாட்டுக்களை ஏற்க முடியாது. தொல்பொருள் திணைக்களத்தில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து தமிழர்களும் பணிபுரிகிறார்கள்.

தொல்பொருள் திணைக்களத்தில் நிலவும் ஆளணி பற்றாக்குறைக்கு தீர்வு காணப்படும். ஆட்சேர்ப்பின் போது தமிழ் மொழி பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஜனாதிபதி தலைமையில் இன்று (நேற்று) காலை நடைபெற்ற தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வரை குருந்தூர் மலையில் ஆராய்ச்சி பணிகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி ஆலயம் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் முன்வைத்த பரிந்துரைகளுக்கு முரணாக செயற்பட்டதால்தான் அப்பிரதேசத்தில் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. இந்து கோயில்களின் அபிவிருத்திக்காக 36 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார்.

## பட்டலந்த....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதற்காக இலக்கு வைக்கப்படுகின்றார் என்பது எமக்கு புரியவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை விவகாரம் தொடர்பில் நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

1960இல் ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டுள்ளனர் எனறு பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜே.வி.பியால் அரச சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் ஆபத்தான அளவில் பெரியது என்று ஆணைக்குழு அறிக்கை தெளிவாகக் கூறுகிறது. 1987 ஒகஸ்ட் மாதத்திலிருந்து நாட்டின் பாதுகாப்பு நிலைமை படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் மோசமடைந்து, அரசியல்வாதிகளின் உயிருக்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்ததாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று ஆட்சியமைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகள்தான் ஜே.வி.பியின் வலுவான இலக்காகக் காணப்பட்டனர். பாரம்பரிய இடதுசாரித் தலைவர்களும் இந்த அச்சுறுத்தல்களுக்கு இலக்காகினர். இந்த அறிக்கையை தற்போதைய ஜனாதிபதியாலும் நிராகரிக்க முடியாது என்று சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனவே தற்போது சகல அரசியல் கட்சிகளும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

உதாரணமாக, இந்த அறிக்கைக்கமைய 1971 ஏப்ரல் கிளர்ச்சி, 1987, 1988, 1989 காலகட்டங்களில் இடம்பெற்ற தொடர் சம்பவங்களின் சிறப்பு பகுப்பாய்வு அதன் நூற்றுக்கணக்கான பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் கவனமாகச் செயல்படவேண்டும். இதுபோன்ற சூழல் முதன் முதலாக 1971ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்போது, பொலிஸாரிடம் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. வங்கிக் கொள்ளைகள் நடந்தன. மக்களின் பணம் பலவந்தமாகப் பறிக்கப்பட்டது. வரலாற்றில் முதல்முறையாக, ஒரு கிளர்ச்சிக்கான ஒத்திகையை நடத்தியதன் மூலம், நமது சமூகம் இதுபோன்ற ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதன் விளைவாக, அவர்கள் 1987, 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தை மீண்டும் நிறுவுவதற்கு முன்னோடியாக இருந்தனர். இதே நிலைமை வடகிழக்கில் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டதால் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டன.

பல தமிழ் அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் அரசியல் கட்சிகளை முற்றிலுமாக அழிக்கவும் அவர்கள் செயல்பட்டனர். தெற்கில், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி உள்ளிட்டவற்றின் ஆதரவாளர்களான மக்களின் வாழ்க்கை அரசியல் ரீதியாக தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சுமார் 1960 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று மதிப்பிட்டுள்ளதாக இவ்வறிக்கையின் 3ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் ஐ.தே.கவின் செயலாளர்களான ஹர்ஷ அபேவர்தன மற்றும் நந்தலால் பெர்னாண்டோ ஆகியோருடன் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்தனர் என்று ஆணைக்குழு அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

அரசியல்வாதிகள் மாத்திரமின்றி பாதுகாப்புப் படையினர், புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட பல முக்கியஸ்களும் கொல்லப்பட்டனர். இந்த சிந்தனைகள் மீண்டும் தூண்டப்பட்டால் நாட்டில் அமைதியின்மை ஏற்படும் என்பதாலேயே அரசியல் கட்சிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். ஆனால் இவ்விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதற்காக இலக்கு வைக்கப்படுகின்றார் என்பது எமக்கு புரியவில்லை.

இவ்வாறான சூழல் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவது அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் முக்கியமானதாகும். அவ்வாறில்லை எனில் நாடு மீண்டும் பாதாளத்தில் விழும். ஆணைக் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள உண்மைகளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. மேலும் அவர் மீதான ஒரே குற்றச்சாட்டு பாதுகாப்பு துறையினருக்கு வீட்டுவசதி வழங்கியமையாகும். இலங்கை முழுவதும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே அவை வழங்கப்பட்டன -என்றார்.

## தமிழர்களுக்கு........

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பேசும்பொருளாக ஊடகங்களிலும் நாடாளுமன்றத்திலும் சர்வதேசத்திலும் உரத்து ஒலித்துக் கொண்டிருக்கிறது 1988ஆம் ஆண்டு இயங்கிய பட்டலந்தை சித்திரவதை முகாம் பற்றிய விவரங்கள். ஜே.வி.பியின் இரண்டாம் கட்டப் புரட்சியின் போது அவர்களை அடக்குவதற்காகச் சட்டவிரோதமாக இந்த முகாம் செயற்பட்டு வந்திருக்கின்றது, இதில் மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உச்சரிக்கப்பட்டுள்ளது.

1994 சந்திரிக்கா ஆட்சிக்கு வந்தபோது இந்த பட்டலந்த முகாம் தொடர்பாக விசாரணை நடைபெற்றது. ஆனால் விசாரிக்கப்பட்ட கோவை திறக்கப்படாமல் இருட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததுடன் உண்மைகளும் புதைக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# சொகுசு வாகனம், வெடி பொருள்களுடன் இராணுவச் சிப்பாய் உட்பட இருவர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையடிவட்டை பகுதியில் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு சொந்தமான சொகுசு வாகனம் மற்றும் வெடி பொருள்களுடன் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றும் விமானப்படை கோப்ரல் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 2.00 மணியளவில் பாலையடிவட்டை பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் அப்பகுதியில் வாகனம் ஒன்றை சோதனை செய்தபோது அதில் வெடிபொருள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வாகனத்திலிருந்து வெடிபொருள்கள், வயர்கள், ஒரு வகையான திரவம் அடங்கிய மூன்று போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட வாகனம் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு சொந்தமான வாகனம் எனவும் குறித்த நபர்கள் புதையல் எடுக்கும் நோக்குடன் அப்பகுதிக்கு வந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட பொருள்கள், கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## நுவரெலியாவில் அரச தாதியர் சங்கம் பணிப்பகிஷ்கரிப்பில்

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தொழில் புரியும் அரசதாதி உத்தியோகத்தர்கள் நேற்று (திங்கட்கிழமை) காலை 10:00 மணி முதல் பகல் 01:00 மணி வரை மூன்று மணித்தியாலயங்கள் சேவைகளை இடைநிறுத்தி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் தாதியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தொழில் புரியும் தாதியர்கள் வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகே நின்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு எதிரான வாசகங்கள் பொறித்த பதாகைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி பணிப்பகிஸ்கரிப்பும், கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவுகளை குறைத்தல் மற்றும் பதவி உயர்வு முறையைக் குறைத்தல் ஆகிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, எமது கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடின், தொடர் பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும் என தாதிய உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.







## களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் தாதியர்கள் பதாகைகள் ஏந்தி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலையில் பணிபுரிகின்ற தாதியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளை ஏந்தியவாறு நேற்று (திங்கட்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தாதியர்களுக்குவரவுசெலவுத்திட்டத்தில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு, சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் குறைக்கப்பட்டது ஏன்? உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு நேற்றைய தினம் நண்பகல் 12.30 மணியளவில் வைத்தியசாலையின் நிருவாக சேவைகளுக்கும், மருத்துவ சேவைகளுக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்படாதவாறுதாதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அரச தாதியர்கள் சங்கத்தின் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் செயலாளர் ஏ.ஜி.எம்.நசூஹான், அரச தாதியர்கள் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் திருமதி வ.புவிதா், உள்ளிட்ட தாதியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதிக்காகத் தொடரும் அழைப்பு

ஆட்சிக்கு வந்து 6 மாத காலப்பகுதியிலேயே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புபல்வேறுசவால்களையும்எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது. சம்பள உயர்வுகளை எதிர்பார்த்து அரச பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள், அரச வேலை கேட்டுப் பட்டதாரிகள் நடத்தும் போராட்டங்கள் என்று ஆளும்தரப்பு மீதான அதிருப்தியின் வெளிப்பாடுகள் அதீதமாக இருக்கின்றன. தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்கிற குற்றச்சாட்டு அனைத்துத் தரப்புக்களில் இருந்தும் தவறாது மேற்கிளம்புகின்றது. அதன் ஆகப் பிந்திய வடிவமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பேராயர் கரித்தினால் மல்க்கம் ரஞ்சித்தின் கருத்து அமைந்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலின் ஆறாவது ஆண்டு நிறைவிற்கு முன்னர் நீதி நிலைநாட்டப்படும் என்று தான் நம்புகிறார் என்றும் அப்படி நடக்காவிட்டால் மீண்டும் வீதிக்கு இறங்கிப் போராடவேண்டியிருக்கும் என்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

"ஈஸ்டர்தாக்குதல்கள்தொடர்பாகநாட்டைஆண்டவர்கள்வாக்குறுதிகளை அளித்தனர். ஆனால், ஒன்றைக்கூட நிறைவேற்றப்படவில்லை. அந்த அமைப்பை மாற்றுவதற்காக இந்த ஆளும்தரப்பை ஆட்சிக்குக் கொண்டுவர நாங்கள் பாடுபட்டோம். ஆனால், அந்த அமைப்பு மாறவில்லை என்றால், நாம் மீண்டும் சிந்திக்க வேண்டியிருக்கும்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக கட்டுவாபிட்டி தேவாலயத்தில் ஜனாதிபதி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் என்றும், விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நாங்கள் இன்னும் கோருகிறோம். தாக்குதலின் 6ஆவது ஆண்டு நிறைவுக்கு முன்னர் ஆளும்தரப்பிடமிருந்து இது தொடர்பாக நியாயமான சமிக்ஞை கிடைத்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். இல்லையெனில், நாங்கள் மீண்டும் வீதிகளில் இறங்க வேண்டியிருக்கும்'' என்றார் அவர்.

தாக்குதலின் 6ஆவது ஆண்டு நிறைவு சித்திரை மாதம் 21 நாளாகும். கிட்டத்தட்ட ஒரு மாத காலம் இருக்கின்றது. அதற்கிடையில் இந்த விடயத்தில் வரவேற்கத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுவதற்கான அறிகுறிகளை ஆளும்தரப்பிடமிருந்து காணமுடியவில்லை. இந்த விடயத்தில் கடந்த கால ஆட்சிகளைப் போன்றே காலத்தை இழுத்தடிக்கும் வகையில் இந்த ஆட்சியும் செயற்படுகின்றதோ என்கிற சந்தேகமே கர்தினாலை இந்த எச்சரிக்கையை விடவைத்திருக்கிறது.

சித்திரை 21, 2019 அன்று நடந்த துயரகரமான ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவத்தில் 270 க்கும் மேற்பட்ட அப்பாவிகள் இறந்தனர். 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக நல்லிணக்கத்தின் மையத்தையே உலுக்கிய இந்தக் கொடூரமான தாக்குதல்கள் தேவாலயங்கள் மற்றும் சொகுசு ஹோட்டல்களை குறிவைத்தன. இன்றுவரை, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் ஒட்டுமொத்த தேசமும் நீதியைக் கோரி வருகின்றன, ஆனால் பதில்கள் மழுப்பலாகவே உள்ளன.

அரசியல் கொந்தளிப்பான வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டில், ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முரண்பாடுகள், பதிலளிக்கப்படாத கேள்விகள் மற்றும் மூடிமறைப்பு குற்றச்சாட்டுகளால் நிறைந்துள்ளன. பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, சில சட்ட நடவடிக்கைகள்எடுக்கப்பட்டாலும், இந்ததாக்குதல்களைஒழுங்கமைத்ததன் பின்னணியில் உள்ள முழு உண்மையும் தெளிவற்றதாகவே உள்ளது. இதுவே கர்தினாலின் விரக்திக்குக் காரணம்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகள் வெறும் மத தீவிரவாதிகளின் செயல் மட்டுமல்ல, பரந்த அரசியல் சதித்திட்டத்தின் ஒரு பகுதி என்றும் கார்டினல் ரஞ்சித் தனது சமீபத்திய அறிக்கையில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். தாக்குதல்கள் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன என்றும், சில குழுக்கள் தீவிரவாதக் கூறுகளை கையாள்வதன் மூலம் நிலையற்ற தன்மையை உருவாக்கின என்றும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

இந்தத்தாக்குதல்களுக்குப்பின்னால் உண்மையில் யார் இருந்தார்கள், அவை ஏன் நடக்க அனுமதிக்கப்பட்டன என்பதை மக்கள் இன்னமும் அறிய விரும்புகிறார்கள். அதைச் செய்வோம் என்று கூறித்தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கே வந்தது. ஆனால், ''விசாரணை நடத்துகின்றோம்'' என்ற பதிலைத் தவிர ஆளும்தரப்பிடமிருந்து உருப்படியான நடவடிக்கைகள் எவற்றையும் காணமுடியவில்லை. அதனால்தான் கர்தினால் தனது அக்கறையை வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது அழைப்பை புறக்கணிக்கக்கூடாது. நீதி தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்க முடியாது, காலவரையின்றி தாமதப்படுத்தப்படவும்கூடாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான போரின் போதான மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பிலும் இது பொருந்தும்.

நீதிக்கான தேடல் என்பது குற்றவாளிகளைத் தண்டிப்பது மட்டுமல்ல; காயமடைந்த தேசத்தை குணப்படுத்துவதும் அதன் நிறுவனங்களில் நம்பிக்கையை மீட்டெடுப்பதும் ஆகும். நீதி முழுமையாக நிறைவேற்றப்படும் வரை, ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையின் காயங்கள் திறந்திருக்கும், மேலும் உண்மைக்கான அழைப்பும் சத்தமாக வளரும். ஆளும்தரப்பு இன்னும் அதிக நெருக்கடிகளுக்குள் சிக்கிக்கொள்ளும்.

# யாழ். போதனா வைத்தியசாலையிலும் தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

தாதியர்கள் நேற்று இலங்கை முழுவதும் 3 மணி நேர அடையாள தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

பாதீட்டில் தாதியர்களுக்கு ஏற்பட்டுள்ள சம்பளப் பிரச்சினையை தீர்க்ககோரி இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காலை 10 மணி முதல் நண்பகல் 1 மணி வரை பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றதுடன் தாதியர்கள் ஒரு மணி நேரம் கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.



# கல்முனை அஸ்ரப் வைத்தியசாலை தாதியர்களும் பணிப்புறக்கணிப்பு

நிந்தவூர் - கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற தாதியர்கள் பல கோரிக்கைகளைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரச தாதியர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்றைய தினம் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிவரை 03 மணிநேரம் நடைபெற்றது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுகளைக் குறைத்தமை, பதவி உயர்வு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று தாதியர்கள் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

2025 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளால் தாதியர் சேவைக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரையில் தாம் அனுபவித்து வந்த உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அரச தாதியர் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், வரவு - செலவு முன்மொழிவுகள் மூலம் தொழில்சார் கௌரவத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. அதனை அங்கீகரிக்கவே முடியாது என்று அரச தாதியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள முன்மொழிவுகளை வாபஸ் பெறுவதற்கோ அல்லது நியாயமான தீர்வை வழங்குவதற்கோ அரசாங்கம் இன்னும் தயாராக இல்லை எனவும் தெரிவித்தனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# கழுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் எண்டோஸ்கோப்பி அலகு திறந்து வைப்பு

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள நோயாளர்கள் எதுவித அச்சமுமின்றி களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு வந்து எண்டோஸ்கோப்பி பரிசோதனைகளைப் பெற்று அவற்றுக்குரிய சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணர் எம்.பிரவின்ஸன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் 50 மில்லியன் ரூபா நிதியில் ஒதுக்கீட்டில் எண்டோஸ்கோப்பி அலகு நேற்று (திங்கட்கிழமை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுகாதார அமைச்சின் 50 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு எண்டோஸ்கோப்பி இயந்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள நோயாளர்கள் இதுவரைகாலமும் எண்டோஸ்கோப்பி தொடர்பான பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியிருந்தது. அச்சத்தின் காரணமாக பல நோயாளர்கள் பரிசோதனைகளுக்குச் செல்லாமல் விடுவதுமுண்டு.

இன்றிலிருந்து பட்டிருப்புத் தொகுதியிலுள்ள நோயாளர்கள் எதுவித அச்சமுமின்றி களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு வந்து எண்டோஸ்கோப்பி பரிசோதனைகளைப் பெற்று அவற்றுக்குரிய சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

எண்டோஸ்கோப்பி என்பது இரண்டு விதமாக பரிசோதனைகளை மேற்கொள்ள முடிகின்றது. இவ்வியந்திரம் இந்த வைத்தியசாலைக்குக் கிடைக்கப்பெற்றதானது பெரும் வரப்பிரசாதாமாகும்.



எனவே உயிராபத்தான நிலையில் நோயாளிகள் சேர்க்கப்படும்போதும் சிறந்த உயிர்காக்கும் சேவைகளை எம்மால் மேற்கொள்ள முடியும் என களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணர் எம்.பிரவின்ஸன் தெரிவித்தார்.



களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதியட்சகர் க.புவனேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில் பொதுவைத்திய நிபுணர் எம்.பிரவின்ஸன், ஏனைய வைத்தியர்கள், தாதிய பரிபாலகர்கள், தாதிய உத்தியோகஸ்த்தர்கள், வைத்தியசாலை நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.






காலைக்கதிர் Kalaikkathir

# ஏமாற்றி லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் அதிகாரியின் மகனுக்கு மறியல்!

யாழில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரியின் மகன் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகிய நிலையில் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வழக்கு ஒன்றினை இல்லாது செய்வதாக கூறி, யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவரின் மகன் ஒருவர் 20 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றுள்ளார். இந்நிலையில் இலஞ்சம் வழங்கியவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்தவகையில் குறித்த பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அத்துடன் இலஞ்சம் பெற்ற நபரை கைது செய்யுமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர் திங்கட்கிழமை சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலையாகினார்.

இதன்போது குறித்த சந்தேகநபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கல்முனையில் சமய தீவிரவாதம் எனும் குற்றச்சாட்டு: குறித்து சிவில் அமைப்பினருடன் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் பேசுபொருளாகிய கல்முனையில் அடிப்படைவாதம் அல்லது தீவிரவாதம் உருவெடுக்கிறது எனும் குற்றச்சாட்டு தொடர்பில் கல்முனையின் தாய்ப்பள்ளிவாசலான முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப்பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீஃப் நம்பிக்கையாளர் சபை பல கட்ட முயற்சிகளை முன்னெடுத்துவருகின்றது.

அந்த வகையில் இது விடயமாக இதுவரைக்கும் எடுக்கப்பட்டிருக்கும் முன்னெடுப்புகள் குறித்து தெளிவுபடுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்குமாக கல்முனையில் உள்ள அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் அமைப்பினர்களுடனான பிரத்தியேக கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1.30 தொடக்கம் பி.ப 4.00 வரை ஆஷாத் ப்ளாசா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் அல்-ஹாஜ் எம். ஐ. அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனையில் உள்ள அனைத்துபள்ளிவாசல்களின்நிருவாகிகளும், அஹ்லுஸ்ஸுன்னாஹ் வல் ஜமாஆ உலமா சபையினர், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா - கல்முனைக் கிளையினர் மற்றும் முன்னணி சிவில் அமைப்பினர்கள் எனபலரும் கலந்துகொண்டு தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தனர் .

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் முக்கிய பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக இவ்விடயத்தை பெரிய பள்ளிவசாலினது தலைமையில் அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் எனவும் இக்குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாக ஊடகங்களில் குறிப்பிடப்படும் குழுவினை நேரடியாக அழைத்து அவர்களின் கொள்கைகள், பின்பற்றுதல்கள் தொடர்பில் கலந்துரையாடி அறிந்து ஆவணப்படுத்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்பின்னர் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஊர்தழுவியரீதியில் முன்னெடுத்தல் எனவும் ஏகமனதாக தீர்மானம் எட்டப்பட்டது.




# மட்டு. மாவட்டத்தில் போட்டியிட பிரதான கட்சிகள் கட்டுப்பணம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிஅதிகார சபை தேர்தலில் போட்டியிட உள்ள பிரதான அரசியல் கட்சிகள் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) தமது கட்டுப்பணங்களை செலுத்தின.

அதன்படி, இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி கட்சியின் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தலைமையில் உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நழீம் தலைமையில் அவர்களது கட்சிக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.



மேலும், உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பல அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக் களும் தமக்கான கட்டுப்பணங்களை செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

# நாகர் கோயிலில் கோடா மீட்பு

யாழ்ப்பாணம் - வடமராட்சி நாகர்கோவில் பகுதியில்

இரண்டு பரல் கோடா, இருபது லீட்டர் கசிப்பு மற்றும் கசிப்பு தயாரிக்கும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். .

காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரும் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# இப்தார் ஒன்றுகூடல்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்முனை மல்ஹருஸ் மகா வித்தியாலய வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வு ஆசிரியர்களின் பங்களிப்பில் நலன்புரி குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் றிப்கா அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ரமழான் சிந்தனையையும், அண்மையில் காலமான பாடசாலை ஆசிரியர் எம்.பி.எம் ரியாத் அவர்களுக்கான துஆ பிரார்த்தனையையும் மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பேஷ்இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்முனை கல்வி வலயத்தின் பணிப்பாளர் எம்.எஸ் .சஹுதுல் நஜீம் அவர்கள் கலந்துகொண்டிருந்ததுடன் மேலும் கல்முனை கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபிர், யூ.எல்.எம்.சாஜித், ஏ.சஞ்சீவன், எம்.எல்.எம். முதர்ரிஸ், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் அஸ்மா அப்துல் மலிக், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.என்.அப்துல் மலிக், ஆசிரிய ஆலோசகர்கள், பிரதேச ஏனைய பாடசாலை அதிபர்கள், அண்மையில் காலமான ஆசிரியர் எம்.பி.எம். ரியாத் அவர்களின் குடும்பத்தினர், பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள் , பகுதி தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஏற்பாட்டில் வாழ்வாதார உலருணவு பொதிகள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் வருடா வருடம் வழங்கி வருகின்றே வாழ்வாதார உலர் உணவு மற்றும் பேரீச்சம் பழப் பொதிகளை வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பவுண்டேசனின் தலைமைக் காரி யாலயத்தில் கல்முனை மாநகரசபை முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் இடம்பெற்றது.

இவ் வாழ்வாதார உலர் உணவு பொதிகளை சுவாமா மற்றும் யாமா நிருவனங்கள் அனுசரணை வழங்கியதுடன் மற்றும் ஒரு தொகை பேரீச்சம் பழங்களை அல் ஹிக்மா நலன்புரி அமைப்பினரும் வழங்கி இருந்தனர்.

இந்நிகழ்விற்கு முன்னாள் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம். நிஷார், கல்முனை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம்.எம்.முகம்மது ஜெய்ஷான் மற்றும் உலமாக்கள், பவுண்டேசனின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள், பயனாளிகள், நலன்விரும் பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.









# ஹுலங்கல மலையிலிருந்து தவறி விழுந்த இளைஞன் சாவு

(கிஷாந்தன்)

மஹவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சலகம பிரதேசத்தில் ஹுலங்கல மலையிலிருந்து கீழே தவறி விழுந்து இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - 09, தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன் தனது 03 நண்பர்களுடன் இணைந்து ஹுலங்கல மலையை பார்வையிட சென்றுள்ளார்.

இதன்போது இந்த இளைஞன் ஹுலங்கல மலையிலிருந்து கீழே தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருட்டு சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் கைது

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாங்குளம் முறுகண்டி வட்டக்கச்சி என பல்வேறு பகுதிகளில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து இதுவரையில் 06 மோட்டார் சைக்கிளும் 15 பவுனுக்கு அதிகமான தங்க நகைகளும் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்தப்பட்ட பொழுது ஞாயிற்றுக்கிழமை மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் கிளிநொச்சி பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி போலீசார் தெரிவித்துள்ளனர் 316

# கிளிநொச்சி முகமாலை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயம்

கிளிநொச்சி முகமாலை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் மூவர் காயம் அடைந்துள்ளனர்.

கிளிநொச்சி முகமாலை இந்திராபுரம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள் மற்றும் கயஸ் வாகனம் என்பன மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது மூவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாகப் பளை பொலீஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# காத்தல் கற்கை நெறியும் பயிற்சியும்

(தில்சாத் பர்வீஸ்)

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான பயிற்சி நெறியின் ஆறாவது நாளாக கடந்த சனிக்கிழமை சம்மாந்துறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி ஐ.எல்.எம். முஸ்தபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் தொடர்பான பயிற்சி நெறியைத் தெளிவூட்டுவதற்காக வளவாளராக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ், வெள்ள பெருக்கு ஏற்படும் இடங் கள், அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் முக்கியத்துவம், வெள்ள நிலைமைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடை முறைகள் போன்ற விடயங்கள் தொடர்பான விளக்கம் அளித்தார்.







## தமிழர்களுக்கு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

37 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புதைக்கப்பட்ட உண்மைகள் வெளியில் வந்துள்ளன. தேசிய மக்கள் கட்சி ஆட்சிக்கு வராவிட்டால் இந்த பட்டலந்த சித்திரவதை முகாம் வெளியில் வந்திருக்காது. பாதிக்கப்பட்டவர்கள் இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதால்தான் இந்த சித்திரவதைமுகாம்வெளியில்வந்திருக்கின்றது.

இது போன்று வடக்கு கிழக்கில் பல சட்டவிரோத முகாம்கள் காணப்பட்டன. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கிய மட்டக்களப்பு சத்திருக்கொண்டான் படைமுகாமில் 4 கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள், முதியோர்கள் பெண்கள் உட்பட 186 பொதுமக்கள் சித்திரவதை செய்யப்பட்டும், பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டும் ஒரே இரவில் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களைக் குழிகளில் போட்டு நிரப்பினார்கள். அதில் ஒருவர் வெட்டுகாயங்களுடன் தப்பி வெளிவந்து உண்மைகளைத் தெரிவித்தார்.

இந்த சத்திருக் கொண்டான் முகாம் சித்திரவதை படுகொலை காணாமல் ஆக்கப்படுவதற்கு முக்கியமான முகாமாக இயங்கியது அவ்வாறே பல முகாம்கள் இயங்கின. விசாரணைக்காகக் கொண்டு செல்லப்படுபவர்கள் திரும்பிவராதளவுக்கு கல்லடி, கரடியனாறு, கொண்டைவெட்டுவான் என்று பல முகாம்கள் காணப்பட்டன.

இங்கு நடந்த சித்திரவதை என்பது சாதாரனமானவை அல்ல. அமிலத் தொட்டிகளில் இளைஞர்களைப் போட்டுக்கூடக் கொலை செய்துள்ளனர்.

பட்டலந்தவில் பாதிக்கப்பட்ட தரப்பான ஜேவிபி ஆட்சிக்கு வந்துள்ளதால் இன்று அது தொடர்பான விசாரணை அறிக்கை வெளியேவந்துள்ளது ஆனால் வடக்குகிழக்கில் தமிழர்கள் சார்பாகச் செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பே இல்லை. எண்ணிக்கை ரீதியாகச் சிறுபான்மையாக இருக்கின்றதனால் எம்மால் ஒருபோதும் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. எனவே எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியை பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை நாம் ஆட்சிக்கு வந்து வெளியில் கொண்டுவரமுடியாது. எனவே தேசிய மக்கள் சக்திஆளும்தரப்பிடம்நாங்கள்உருக்கமாகவும் நியாயமாகவும் கேட்பது, வடக்கு கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் சித்திரவதைகள் தொடர்பாகவும் நீதியான விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்ட வாருங்கள். உங்கள் தோழர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்காக பட்டலந்தை சித்திரவதை முகாம் அறிக்கையை வெளிக்கொண்டுவந்திருப்பதாக மற்றவர்களுக்குக் கூறாமல், தமிழர்கள் மீதான கொடுமைகளையும் நீங்கள் வெளிக் கொண்டுவருவீர்களாக இருந்தால் நீங்கள் சமத்துவவாதிகள்.

பட்டலந்தை அறிக்கையை ஒரு ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு வடக்கு கிழக்கில் இடம்பெற்ற சித்திரவதைகள் பற்றிய விவரங்களையும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு வெளிக்கொண்டுவரவேண்டும் - என்றார்.

## தையிட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்ற வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சானக சம்பத் மதுகொட வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் புத்தசாசனம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதநல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்த வேண்டும். மதத்தலங்கள் மற்றும் பிரிவெனா உட்பட மத பாடசாலைகள் அபிவிருத்திக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை.

மத நல்லிணக்கம் தொடர்பில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கான திட்டங்களைக் குறிப்பிடவில்லை. மதத் தலங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம்பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத்தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு.

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு இதுவரையில் உறுதியான தீர்வு முன்வைக்கப்படவில்லை. 1956ஆம் ஆண்டு நகர திட்ட வரைபடத்தில் திஸ்ஸ விகாரை உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விகாரையை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் உரிமை கோருவதற்காகப் போலியான ஆவணங்களை முன்னிலைப்படுத்தி போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு விசேட குழுவை நியமிக்கவேண்டும். இந்த விகாரையை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் குடியமர்ந்திருப்பவர்களை அகற்ற வேண்டும். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையிலும் இதே பிரச்சினை காணப்படுகிறது. நீதிமன்ற உத்தரவினால் ஆராய்ச்சிப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் பௌத்த மத தொல்பொருள் சின்னங்கள் அழிவடைவதற்குக் காரணியாக அமையும். குருந்தூர்மலையில் நில அளவையியல் திணைக்களம் சட்ட ரீதியில் காணிஎல்லைகளை அடையாளப்படுத்தியுள்ள நிலையில் ஒரு தரப்பினர் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள்.

வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் பௌத்த விகாரை மற்றும் தொல்பொருள் சின்னங்களை பிரச்சினைக்கு உரியதாக்கி அதனூடாக அரசியல் செய்கிறார்கள். வடக்கு மாகாணத்தில் 600 இடங்கள் தொல்பொருள் மையங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடங்களை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து, தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்கவேணடும் - என்றார்.

## பௌத்தத்துக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத மற்றும் இன சுதந்திரத்தை உறுதிப்படுத்தினால் மாத்திரமே நாடு என்ற ரீதியில் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய முடியும். அனைத்து இனத்தவர்களையும் ஒன்றிணைத்து செயற்படவேண்டும் என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய ஆளும்தரப்பு பயணிக்கிறது. இருப்பினும் நடப்பு சம்பவங்கள் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு எதிர்மறையானதாக அமைந்துள்ளன.

சிறுபான்மை மக்களின் மனங்களைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றன. பாரம்பரியமான தொன்மையைக்கொண்டுள்ள இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம் மற்றும் பௌத்தம் ஆகிய மதங்கள் சமனிலையான முறையில் பார்க்கப்படவேண்டும். பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் அந்தஸ்து இந்து உட்பட ஏனைய மதங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பண்டைய தொன்மையுடன் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றை பேணி பாதுகாக்க வேண்டும். இந்த ஆலயங்களை புனரமைக்கவேண்டிய பொறுப்பு புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சுக்கு உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் தாந்தாமலை ஆலயம் தமிழர்களின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கிறது. இந்த ஆலயத்தை புனரமைப்பதற்கு தொல்பொருள் திணைக்களமும், அரச நிகழ்ச்சி நிரலில் உள்ள நிறுவனங்களும் தடையாகச் செயற்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை, மண்டூர் முருகன் ஆலயம் உட்பட பல ஆலயங்கள் உள்ளன. இவற்றைபுனரமைப்பதற்குகடந்தகாலங்களில் நிதி ஒதுக்கப்படவில்லை. அதேபோன்று 500 - 600 ஆண்டுகள் பழமைவாந்த தேவாலயங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளன. இவற்றை அபிவிருத்தி செய்ய கடந்த காலங்களில் நிதி ஒதுக்கப்படவில்லை..

அண்மையில் கபரனை பகுதியில் உள்ள இந்து ஆலயத்தின் முகப்பினை மறைக்கும் வகையில் பேருந்து தரிப்பிட நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது இந்துக்களின் மனங்களைப் புண்படுத்தியுள்ளது. இந்த ஆளும்தரப்பு இந்து, கிருஸ்தவம் மற்றும் முஸ்லிம் மக்களின் மனங்களை வருத்தும் வகையில் செயற்படாது என்று கருதுகிறோம். இந்த முறையற்றவகையில் செயற்பட்டவர்கள் யார் என்பதை குறிப்பிட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருந்தொகையாக குளங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் அப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆலயங்களை புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுங்கள். தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவியுங்கள் என்றார்.

## பட்டலந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்படாமலே இருந்தது.

பின்னர் ரணில் விக்கிரமசிங்க அல்ஜசீராவின் கேள்விகளிற்கு பதிலளிக்க முடியாத சூழ்நிலையை எதிர்கொண்டதன் பிற்பாடு இது நாட்டில் மீண்டும் பேசுபொருளாக மாறியது. இது பேசுபொருளான பின்னர்தான் ஜேவிபி ஆட்சியாளர்களுக்கு இவ்வாறானதொரு அறிக்கை இருக்கின்றது அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்ற நினைப்பு வந்தது.

டக்ளஸ் பீரிசிற்கு இந்த கொலைகளிற்காக வழங்கப்பட்ட பதவி உயர்வுகள், போலி கடவுச்சீட்டுகள் பற்றி இந்த அறிக்கையை நிராகரித்த ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தெரியும் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. பட்டலந்தவதைமுகாம்கொலைகளில் முக்கிய சந்தேகநபராக இருக்கக்கூடிய அரசபொலிஸ் சேவையை சேர்ந்தவரான டக்ளஸ் பீரிஸ் வசம் இருந்த பட்டலந்த கைத்தொழில்பேட்டை வீடுகள் சிலவற்றிற்கும் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பாகயிருந்துள்ளார் என பட்டலந்த அறிக்கையில் தெளிவாகக்குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க இன்று தட்டிக்கழிக்கின்றார். தான் ஒரு சாட்சியாகவே ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார் என்று அவர் பொய் கூறுகின்றார். அவர் சாட்சியாக இல்லை, குற்றவாளியாகத்தான் தொடர்ந்தும் அறிக்கையில் உரைக்கப்படுகின்றார்.

பட்டலந்த வதைமுகாம் தொடர்பான பிரதானபுகைப்படமாக இருப்பது டக்ளஸ்பீரிசின் இரு புதல்வர்களும் சித்திரவதைக்குள்ளான நபருக்கு அருகில் துப்பாக்கிகளுடன் இருக்கும் படம்தான். இந்தப் படம் பல விடயங்களை எங்களிற்கு சுட்டிக்காட்டுகின்றது. அந்தக் காலப் பகுதியில் 18 வயதைக்கூட அடையாத டக்ளஸ் பீரிஸின் இரண்டு மகன்மாரும் இந்தச் சித்திரவதையில் பங்கெடுத்திருப்பது அவர்கள் குடும்பமாக ஏனைய மனிதர்களைச் சித்திரவதை செய்து கொலை செய்வதில் ஆனந்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து ரணில் விக்கிரமசிங்க வெறுமனே வார்த்தை ஜாலங்களை பயன்படுத்தி தப்பிக்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மை தன்மை பற்றியும் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பெரும் மனித உரிமை மீறல்களிற்குப் பின்னால் இருந்தமை எல்லாவற்றையும் நாங்கள் நன்கறிவோம். எனவே ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஏற்ப, பட்டலந்தவில் மனிதர்களைச் சித்திரவதைசெய்துகொன்றகுற்றத்திற்றத்தைப் புரிந்தவர்கள்தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும்.

இதற்கு அப்பால் சென்று இன்னுமொரு விடயத்தையும் நாங்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும். இந்த நாட்டில் பட்டலந்தை என்ற சித்திரவதைமுகாம் மாத்திரம்தான் இருந்ததா? பட்டலந்தவை தவிர வேறு முகாம்களில் கொலைகள் இடம்பெறவில்லையா? இடம்பெற்றிருக்கின்றது. குறிப்பாக, தமிழ் மக்களிற்கு எதிரான வன்முறைகள், அரச ஆதரவுடன் 1983இல் இடம்பெற்ற கலவரம், வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற படுகொலைகள், திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலை, மூதூரில் இடம்பெற்ற 17 தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்களின் படுகொலைகள், செஞ்சோலையில் இடம்பெற்ற அப்பாவிச் சிறுவர்களின் கொலை, அதன் பின்னர் இறுதிப் போரிலே சரணடைந்து காணாமலாக்கப்பட்டவர்களின் நிலை, இசைப்பிரியா உட்பட பல பெண்கள் சிரழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டது, செம்மணிபுதைகுழி தொடர்பான நிலைமை. இன்று கண்டுபிடிக்கப்பட்ட கொக்குதொடுவாய் புதைகுழி என்று பலவும் உள்ளன.

இவை அனைத்திற்கும் இலங்கையின் முப்படை தளபதிகளாகயிருந்த ஜனாதிபதிகளிற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.

இவை அனைத்தையும் விசாரணை செய்வதற்கு ஆணைக்குழுக்கள் இருந்தனவா என்பது தெரியாது. சிலவற்றிற்கு ஆணைக்குழுக்களை நியமித்திருந்தார்கள் அவற்றின் அறிக்கை எங்கே என்று தெரியாது. எனவே பட்டலந்த அறிக்கையை சமர்த்தது போல ஏனைய கொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கைகளையும் சமர்ப்பிக்கவேண்டிய கட்டாயம் ஆளும்தரப்புக்கு உள்ளது.

அதுபோல முஸ்லீம்கள் தொடர்பாக ஏற்பட்ட கலவரங்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டும்.

பட்டலந்த அறிக்கையில் ஜேவிபியினர் காட்டும் ஆர்வத்தை ஏனைய அறிக்கைகளிலும் படுகொலைகளிலும் காட்டவேண்டும். ஏனைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு எதனையும் செய்ய முடியாது. இந்த நாட்டில் நீதி நிலைநாட்டப்படவேண்டுமாக இருந்தால் அனைத்துக்கும் ஒரே மாதிரியான நீதியை நிலைநாட்டவேண்டும் - என்றார்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களமிறக்கப்படவுள்ளன. முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் போட்டியிடுவதோடு, புதுமுகங்களுக்கும் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

சில மாவட்டங்களில் வேறு கட்சிகளுடன் இணைந்து வேறு சின்னங்களில் போட்டியிடவுள்ளோம். இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக எம்முடன் இணையவில்லை. எம்முடன் இணையும் கட்சிகள் மாவட்டத்துக்கு மாவட்டம் மாறுபடுகின்றன. எனினும் சில தொகுதிகளில் பொது சின்னத்தில் சில வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். ஏனைய மாவட்டங்களில் பொதுஜன பெரமுன தவிர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்றவற்றுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம். கொழும்பு மாநகர மேயர் வேட்பாளர் யார் என்பதை விரைவில் அறிவிப்போம்.

நகர சபைகள் கலைக்கப்பட்ட போதிலும், ஐ.தே.க. உறுப்பினர்கள் மக்களுக்கு பல்வேறு சேவைகளை ஆற்றியிருக்கின்றனர். எனவே மக்கள் மத்தியில் அவர்களுக்கு சிறந்த வரவேற்பிருக்கிறது. அது எமக்குப் பெரும் பலமாகும் - என்றார்.

## கணேமுல்ல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அலுவலர்களும் அடங்குவர்.

பூஸா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சஞ்சிவ, நீதிமன்றத்திக்கு அழைத்து வரப்பட்ட பின்னர் குற்றவாளிக் கூண்டில் ஏறிநின்றபோது சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் விசாரணை நடத்திவரும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் -பூஸா கைது சிறைச்சாலை பிரதான அதிகாரியை நேற்று இரண்டாவது தடவையாக விசாரணைக்கு அழைத்திருந்தனர். கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அதிகாரி நேற்றே கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவலவிடம் முற்படுத்தினார். அவரை மார்ச் 21 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சம்பவ தினத்தன்று சந்தேகநபரான கணேமுல்லசஞ்சீவவை குறித்த சிறைச்சாலை அதிகாரியே நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தவர் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கடமைதவறியதன் காரணமாக இந்தக் குற்றம் நடந்ததா என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்ற சந்தேகநபரைக் கைது செய்ய கைது செய்யப்பட்டுள்ள சிறை அதிகாரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் கையடக்க தொலைபேசி அழைப்புகளின் பதிவை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறும் நீதிமன்றில் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# பக்தி இயக்கத்தின் முத்தாய் ஒளிர்கிறார் காரைக்கால் அம்மையார்!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**

உலகிலே பல மொழிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும் முக்கியமான மொழிகள்தாம். ஒவ் வொரு மொழிக்கும் ஒவ்வொரு விதமான சிறப்பு இருக்கிறது. ஆனால் எந்த ஒரு மொழிக்குமே இல்லாத சிறப்பினை உலகில் எங்கள் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. அந்தச் சிறப்புத்தான் ' பக்தி இலக்கியம் ' என் னும் சிறப்பாகும். பக்தி என்பது – இலக்கியமாக எழுந்திருப்பது உலகமொழிகளில் தமிழ் மொழியில் மட் டுமே என்பதை எல்லா மொழியியல் அறிஞர்களுமே ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அந்த அளவுக்கு தனித்து வமாய் , வளர்ந்து யாவரும் வியக்கும் வண்ணம் பக்தி இலக்கியம் தமிழில் அமைந்திருக்கிறது என்பது தமிழருக்கெல்லாம் மிகவும் பெருமை அல்லவா !

பக்தி இலக்கிய வரலாற்றை எடுத்து நோக்கினால் தமிழகத்திற்கு தனித்த தொரு இடமுண்டு எனலாம். சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் உவந்தளித்த பக்தி இலக்கியத்தால் எங்கள் தமிழ் மொழி ' பக்தியின் மொழி ' என்னும் சிறப்பினைப் பெற்றது என்பது மறுக்கமுடியாத உண்மை எனலாம். இவர்களின் அருட்பாடல்களால் ' பக்தி இலக்கியம் ' தமிழின் தமிழ்ச் சமூகத்தின் பெருஞ் சொத்தாக ஆகி விட்டது எனலாம்.

சைவ பக்தி இலக்கியத்தின் எழுகின்ற ஞாயிறாக விளங்குவர் காரைக் கால் தந்த தவப்புதல்வி , தமிழ்ச் செல்வி , புனிதவதியாகிய காரைக்கால் அம்மையார் ஆவர். சிவஞானச் செந்திருவான இவ்வம்மையார் சைவத் திருமுறைகளின் தோற்றுதல்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பதை பலரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆன்ம ஞானத்தை , ஆன்ம சுதந்திரத்தை , ஆன்ம முக்தியை பெற்று பெண் குலத்துக்கே பெருமையினைத் தேடித்தந்தவராக இவ்வம்மையார் திகழுகிறார் எனலாம்.

சைவசமயம் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூவர்மட்டுமே பெண்களாக இருக்கிறார்கள். அவர்களுள் மூத்தவராய் தலையானவராய் இருப்பவர் காரைக்கார் அம்மையார் என்பது மனங்கொள்ளத்த க்கதாகும். மற்றைய பெண்களைவிட காராக்கால் தந்த தமிழ்ச்செல்வி யாவற்றிலும் முன்னிற்பவர் ஆகி றார் எனலாம். இவ்வம்மையாரைப் பன்முக நோக்கிலே தான் பார்க்கவேண்டி இருக்கிறது.

தத்துவச் செறிவு மிக்கார். மெஞ்ஞான உணர்வு மிக்கார். சமயசாதனை மிக்கார். இலக்கியச் சாதனை மிக் கார். என்று இவரின் நோக்கு பரந்து விரிந்து சைவ பக்தி இலக்கியத்துக்கு வெளிச்சமாய் நிற்கிறது என லாம்.

அதிசயங்கள் இல்லாமல் பிறந்த அம்மையார் அனைவரும் மெச்சும் ஆன்மீக அதிசயமாகிறார். சித்துக்கள் அறியாத அம்மையார் சிந்தனைகளை விதைத்த பெரும் சித்தராகவே ஆகிறார் சைவபக்தி உலகில் சாதா ரண பெண்ணாக வளர்ந்து சாதாரணமாகவே இல்லறவாழ்வில் இணைக்கப்படுகின்றார். இல்லறத்தில் நல் லறம் விளையும் வண்ணம் வாழ்ந்தவரின் வாழ்வில் ஆண்டவன் அருள் பாய்ந்து அவரின் கோலம் மாறு கிறது. குடும்பம் மாறுகிறது. சைவ பக்தி உலகுக்கு தத்துவஞான முத்துக் கிடை க்கிறது எனலாம். இது காரைக்காலில் வந்து பிறந்த ஏனைய பெண்களுக்கு வாய்க்கவில்லை. இவருக்கு மட்டுமே வாய்த்திருக் கிற தென்றால் திருவருள் என்பது கருவிலேயே வந்து அமர்ந்து விட்டது என்றுதான் கருத்தத் தோன்று கிறதல்லவா ! மாங்கனியின் வருகை ஒரு மங்கையின் வாழ்வையே பக்திக்குள் புகுந்துவிட வைக்கிறது ! மாங்கனியால் மானிலத்துக்கே ஆன்மீக அம்மையாய் ஆகிவிடுகிறார் காரக்கால் ஈந்த புனிதவதியான தமிழ்ச் செல்வி !

காரைக்கால் தந்த ஆன்மீக முத்து சைவ பக்தி இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கினார் என்பதற்கு அவரின் பரந்துபட்ட செயற்பாடுகளே அரணாகி நிற்கின்றன. கோவில்களில் இருக்கின்ற நாயன்மார்களின் சிலைகள் நின்றபடியே இருக்க காரைக்கால் அம்மையார் சிலைமட்டும் இருந்தபடி வைக்கப்பட்டிருப் பதைக் காணலாம்.மற்றவர்கள் எல்லாம் நிற்க இவர் மட்டும் இருக்கும் வண்ணம் சிறப்புற்றதற்குக் கார ணந்தான் என்ன ?

மாங்கனியை இறைவனிடம் பெற்றதாலா ? பேயுடலுடன் கயிலை மலையில் தலையால் நடந்து அதியம் புரிந்ததாலா ? புலமையில் சிறந்து விளங்கியதாலா ? தியாகங்களைச் செய்தலாலா ? அப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கையில் அம்மையாரைவிட பல செய்தவர்கள் இருந்திருக்கிறார்கள் எனலாம். அப்படி இருக்க இவருக்கேன் இப்படிச் சிறப்பென்றால் ' இவர் தோன்றி இருக்காவிட்டால் சைவமும் இல்லை மற்ற சிவன் அடியார்களும் இல்லை ' என்பதனாலாகும் என்பது பல பெரியோர்களின் கருத்து எனலாம்.

' இவள் நம்மைப் பேணும் அம்மை ' என்று முழுமுதற் கடவுளான சிவனே செப்பியதாகக் கூறப்படுகிறது. உண்மையில்






சைவத்தைப் பேணிய தாய் ! சைவத்துக்கு ஒரு திட்டமான வடிவம் கொடுத்து அது ஒரு தனி ப்பெருஞ் சமயமாக வளர்வதற்கான அடித்தளம் இட்டவர் அம்மையார் அவர்களேயாவர். சமணமும் சாக்கி யமும் சைவத்தை நிலைகுலையச் செய்யாமல் சைவத்தை தலைநிமிரச் செய்தவர் சைவம் நிலைபெறச் செய்தவர் காராக்கால் அம்மையார் என்பதனாலேயே அவர் முக்கியத்துவப் படுத்தப்படுகிறார். முன்னிலை யில் அமர்ந்திருக்கிறார் எனலாம். எந்த ஒன்றும் தாயின் வயிற்றில்த்தான் பிறக்க வேண்டும் என்பதை நாமனைவரும் அறிவோம். முழுத்தன்மை பெற்ற சைவம் என்ற ஒன்று , சிவ வழிபாடு என்ற ஒன்று , காரைக்கால் அம்மையாராகிய தாய் வயிற்றில் பிறந்ததாகும் என்பதை மனமிருத்தல் அவசியமாகும்.தமிழ் நாட்டில் சைவத்தைக் காத்திட்ட பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும் எனலாம். அவர் போட் டுக் கொடுத்த பாதையில்த்தான் பின் வந்த அடியார்கள் செப்பமாய் செல்ல முடிந்தது எனலாம். ' தென்னா டுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாய் ' ஆவதற்கு முதலடி எடுத்து வைத்தவர் என்னும் நிலை யில் காரைக்கால் தந்த தமிழ்ச்செல்வி புனிதவதி அம்மையார் திகழுகிறார் எனலாம்.

சைவசமயத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாய் இருந்த காரைக்கால் அம்மையார் தமிழ் இலக்கியத்திலும் புத்திலக்கிய முன்னோடியாக மிளிர்கிறார் எனலாம். சங்க இலக்கியம் காதலையும் , போரையும் கருவாய் கொண்டு மகிழ்ந்தது.காப்பியங்கள் சாதனை புரிந்த தலைவர்கள் புகழ்பாடி போற் றும் வகையில் எழுந்தன. ஆனால் பக்தி எனும் பாதையில் மலர்ந்த பக்தி இலக்கியங்களோ மானுடக் காதலை , மனிதனைப் புகழ்ந்து பாடுவதை விடுத்து இறைக் காதலையும் , பரமான் வரவைப் பாடுதலை யும் , இறை தொடர்பினைத் தேடுவனவாகவுமே மலர்ந்தன எனலாம். இவ்வாறு மலர்ந்த பக்தி இலக்கியத் தில் சிறப்பாக சைவபக்தி இலக்கியத்தின் முன்னோடியாக காரைக்கால் அம்மையார் திகழ்கிறார் என லாம். நாயன்மார்களுக்குக் காலத்தால் முற்பட்ட இவ்வம்மையார் தமிழ் இலக்கியத்தில் பல இலட்சியப் புதுமைகளைச் செய்து புத்திலக்கிய முன்னோடியாக விளங்குகிறார் என்பதை தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் அனைவருமே ஏற்று நின்கின்றார்கள் என்பது மனம் இருத்தவேண்டிய கருத்தெனலாம்.

அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பன அம்மையார் தமிழ் இலக்கியத்துக்கு அளித்த மிகப் பெருங்கொடைகள் எனலாம். முதல் ஆழ்வார்களின் பங்களிப்பும் அம்மையாரின் பங்களிப்பும் பல்லவர் காலத்தில் பக்திப் பாடல்கள் தோன்றுவதற்கு விடி வெள்ளியாய் அமைந்தாலும் – பல்லவர்கால இலக்கியக்கியப் போக்கினுக்கு வழிகாட்டிய பெருமையினை அம்மையாரே பெற்றுக் கொள்ளுகிறார் எனலாம்.அந்த வகையில் அம்மையாரின் பிரபந்தங்கள் விளங்கு கின்றன என தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் வியந்து போற்றுகின்றனர்.இந்த வகையில் காரைக் கால் தந்த தமிழ்ச் செல்வி காரைக்கால் அம்மையார் தமிழகத்துப் பெரும்புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்த தமிழிலக்கியப் படைப்பாளியாக விளங்குகிறார் என்பது மிகவும் பொருத்த முடையதேயாகும்.

நூற்று நாற்பது செய்யுட்களே காரைக்கால் அம்மையாரின் இலக்கிய வெளிப்பாடாய் கிடைத்திருக்கிறது. நான்கு சிறிய பிரபந்தங்கள் வாயிலாக இப்பாடல்கள் வந்திருக்கின்றன. குறைந்த அளவில் இலக்கியத்தில் இணைந்து நிற்கும் இவரை பெரும்புலவர் என்று எப்படிக் கருத முடியும் ? அப்படி எண்ணுமளவுக்கு அம்மையாரின் இலக்கிய ஆளுமைதான் என்ன ? என்று சிந்திக்கத் தோன்றுகிறதல்லவா ! இலக்கியத்தரம் என்பது எண்ணிக்கையால் வருவதுதல்ல ! இலக்கியத்தைப் படைத்த சிறப்பினைக் கொண்டே தீர்மானி க்கப்படுவ தெனலாம். அந்த வகையில் அம்மையாரின் ஆற்றல் அவரை உன்னத நிலையில் காணவே வைத்திருக்கிறது எனலாம்.

பின்னால் வந்த நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் பொருள் மரபிலும்,யாப்பு முறையிலும் அம்மை யாரே வழிகாட்டியாய் அமைந்திருக்கிறார். அவரின் பிரபந்தங்கள் அவர்களுக்கு பாடமாக நல்லாசிரி யனாக முன்னின்றது எனலாம். வெண்பாவைக் கையாண்டு சங்கமருவிய கால நிலையினைப் பேணினார். ஆனால் தனது உள்ளத்தில் எழும் தெய்வானுபங்களை , உணர்ச்சிகளை வெளிப்படுத்த வெண்பா யாப்பு சிறந்ததாக இல்லை எனக்கருதி விருத்தம் என்னும் யாப்பினைக் கையெடுக்கின்றார். அம்மையாரின் இந் தச் சிந்தனையானது தமிழ் இலக்கியப் பாதையில் புதிய இலக்கிய மரபை ஆரம்பித்து வைத்தது எனலாம்.

இசையால் இறைவனைப் பாடும் பதிகப் பாதையினை அம்மையாரே தொடக்கிவைக்கிறார். பதிகத்தின் நிறைவில் இடம்பெறும் திருக்கடைக் காப்புப் பாடலில் – பாடுபவர் பெயர், பாடுவோர் பெறும் நலன் கள், ஆகியவற்றை ஆரம்பித்து வைத்தவரும் அம்மையாரே ஆவர். இதுவே சம்பந்தப் பெருமானுக்குக் கைகொடுத்தது எனலாம். அந்தாதி என்னும் யாப்பினை அம்மையார் காட்டுகிறார். பின்னர் தொடரும் இலக்கியப் பெருவழிக்கு இவையாவுமே பெருவெளிச்சமாய் அமைகிறது என்பதை மனமிருத்தினால் அம்மையாரின் ஆளுமை தெள்ளிதிற் புலனாகும் !

நிலையாமையை வலியுறுத்தி இலக்கியம் பேசப்பட்ட நிலையில் – இல்லறத்தில் இன்பங்காணா இறைவ ன்பால் இன்பங்கண்ட காரைக்கால் அம்மையாரின் சிந்தனையும் அதன் நிமித்தம் வெளிவந்த அவரின் இலக்கிய வெளிச்சமும் ; மக்கள் மனதில் நல்லதோர் நம்பிக்கையினை வாழ்க்கையில் உருவாக்குவதாக அமைந்தது எனலாம். பெண்ணாக இருந்தும் ஈமப்புறங் காட்டினைக் கண்டு அஞ்சாமல் அங்கு ஆண்டவன் ஓயாமல் நடனமிடுகிறான் என்று கண்டு கொள்ளுகிறார். இச்செயலானது அம்மையாரினால் அஞ்சிய பெண்களுக்குக் காட்டிய புதிய பாதையாக எடுத்துக் கொள்ளவும் – அம்மையாரின் புதியதான ஒரு சமயப் பாதையினைக் காட்டி நிற்பதையும் விளக்கி நிற்கிறது அல்லவா ! இப்படிச் செய்தமையால் காரைக்கால் அம்மையார் தனித்துவம் மிக்க பெண்ணரசியாய் மிளிர்கிறார் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. சுடு காட்டில் இறைவனின் நடனத்தைக் காண ஒரு சாதரண பெண்மணி விரும்பியமையும், சுடலையினை நடனமிடும் இடமாகக் கண்டு ஆனந்தம் அடைந்தமையும் , அம்மையாரின் மனதில் தோன்றிய வித்தியா சமான போக்கினையே காட்டுகிறது எனலாம். அந்த நடனத்தை ரசிப்பவர்கள் பேய்களாக இருப்பதால் தனக்கும் பேய் உருவினை ஆண்டவனிடம் வேண்டிப் பெற்றார் என்பதும் அம்மையாரின் நிலையினை அடியார்கள் நிலையில் பார்க்கும்பொழுது மிகவும் வேறுபட்ட , மாறு பட்ட , புதிய தொரு கோணத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

சிவனைப் பற்றி ஏனைய இலக்கியங்களில் காட்டியதை விட காரைக்கால் அம்மையார் தனது பாடல்கள் வாயிலாக காட்டிய பாங்கு மிகவும் வளர்ச்சி உடையதாகவே இருக்கிறது என்று பேராசிரியர் அ.ச. ஞானச ம்பந்தன் அவர்கள் குறிப்படுவது நோக்கத்தக்கதாகும். ' இறைவனுடன் அன்பு பூண்டு அவனுக்கு அடியவ னாகவும் , அடிமையாகவும் , வாழ முற்படவேண்டும். இறைவனை ஏத்தினால் பிறவி நீங்கும். இறைவனை நினைப்பவர் நெஞ்சுளே உறைகின்றான். அவனை அன்பு செய்யத் தொடங்கினால் அவலம் இல்லை. அவனிடம் அன்பு செய்தால் இருவினை கழலும் என்ற கருத்துக்கள் சிவ வழி பாட்டு வரலாற்றில் முதன் முதலாகக் காட்டி தனது பக்திப் பனுவல்களை வழங்கியவர் காரைக்கால் அம்மையார் என்பது மனங் கொள்ளத்தக்கதெனலாம்.

கரைக்கால் தந்த தவச்செல்வி , தமிழ்ச்செல்வி , புனிதவதி என்று பெருமையுடன் காட்டும் சேக்கிழார் அவர்கள் – அம்மையாரை சைவ பக்தி இலக்கிய வரலாற்றில் மிகவும் உன்னத நிலையிலே வைத்து ஏற்றிப் போற்றுகிறார் எனலாம் பின்னே வரப்போகின்ற சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய அருளாளர்கள் பாடவிருக்கும் பதிகங்களுக்கெல்லாம் முன்னோடியாகப் பாடிய பெருமை மிக்கவர் அம்மையார் என்பதால் அவரின் பதிகளுக்கு ' மூத்த நல்பதிகம் ' என்னும் பெயரைக் கொடுத்து பெருமைப்படுத்துகிறார்.

' அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு ' என்னும் நிலையினை வெறுத்து நிற்கும் – சேக்கிழார் காரை க்கால் அம்மையாரின் பெருமையைக் காட்டி அவரைத்தொடர்ந்து திலவதியார், மங்கையற்கரசியார் போன் றவர்களைக் காட்டி பெண்கள் எல்லோருக்கும் – ஏன் பெண்களை ஒதுக்கிய சமூகத்துக்கே நல்லதோர் பாட த்தைப் புகட்டுகிறார் என்பது புலனாகிறதல்லவா ?

தமிழ் நாட்டிலே முதன்முதலாக சைவநாயன்மார் வரிசையில்,வணங்கப் பெற்றவர் என்னும் பெருமைக் குரியவர் காரைக்கால் அம்மையார் அவர்களே ஆவர். சிலை அமைத்து வழிபாடும் அம்மையாருக்கு நடத்த ப்படுகிறது. வணிகத்துக்குச் சென்றவர்கள் அம்மையாரின் சிலையினை எடுத்துச் சென்றுள்ளனர் என்று அறிய முடிகிறது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலே இவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். அம்மையாரின் வழிபாடானது தாய்லாந்து, கம்பூச்சியா, இந்தோனேசியா, பாலி, போன்ற இடங்களில் பரவியிருக்கிறது என்பதையும் வரலாற்றால் கண்டுகொள்ளுகிறோம். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அம்மையாரின் வழிபாடு பரவி இருந்திருக்கிறது என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்திருக் கின்றன என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

காரைக்கால் அம்மையாரின் வழிபாடு மட்டுமல்ல அவரின் வரலாறும் வடமொழி, தெலுங்கு, கன்னடம் , போன்ற பிறமொழிகளிலும் பரவி இருக்கிறது என்பது தமிழ் மொழிக்கும் சைவத்துக்கும் கிடைத்த மிகப் பெரிய சிறப்பு என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. அப்படிப் பெருமைக்குரிய காரைக்கால் ஈன்ற தவச் செல்வி , தமிழ்ச் செல்வி , புனிதவதியான காரைக்கால் அம்மையினை நினைப்போம். அவரின் ஆற்றலை, பக்தியை அனைவருடனும் பகிந்து அவரைப் போற்றி நிற்போம் .

**' பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி**
**அறவாநீ நீயாடும்போது அடியின் கீழுருக்க என்றார் '**

# சம்மாந்துறையில் நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றல் தீவிரம்

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட செந்நெல் கிராம பகுதியில் 7 பேரை கட்டாக்காலி நாய் கடித்த சம்பவம் கடந்த மார்ச் புதன்கிழமை பதிவாகி இருந்தது.

இதற்கமைய 7 பேருக்கு கடித்த நாயின் மாதிரி அறிக்கை ரேபிஸ் நேர்மறை என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இனால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப் பிரதேசத்தில், பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் மற்றும் வளர்ப்பு நாய்கள், கட்டாக்காலி நாய்களுக்கு ஏஆர்வி தடுப்பூசி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம். நௌசாத் ஆலோசனைக்கமைய மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லாபீர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் பங்கேற்று உரிய நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றன.





# நீதியரசர் பிரேமசங்கருக்கு திருமலையில் மதிப்பளிப்பு

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்றதை அடுத்து திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வு சனிக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது. குறித்த பதவி உயர்வை ஜனாதிபதியால் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், ஏ.டபிள்யூ அப்துல் சத்தார் உட்பட சட்டத்தரணிகள் பலரும் கலந்துகொண்டனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பெரிய பள்ளியின் இப்தார் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வும், புதிய நிர்வாக சபை அறிமுகமும் ஞாயிற்றுக்கிழமை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவர் டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் பங்குபற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவையும் துஆப் பிரார்த்தனையைம் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.ஆதம்பாவா (ரஸாதி) நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாக சபை அறிமுகமும் இப்தாரும் இடம்பெற்றது. நிகழ்வின் நன்றியுரையினை சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ் நிகழ்த்தினார்.



நிகழ்வில் சாய்ந்தமருது ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி எம்.எம்.எம். சலீம், சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் உப தலைவரும் முபாரக் நிறுவனத்தின் அதிபருமான எம்.எஸ்.எம். முபாரக், பொருளாளர் தொழிலதிபர் ஏ.எல்.எம்.முஸ்தபா உள்ளிட்ட திணைக்களத் தலைவர்கள், சாய்ந்தமருது பிரதேச மஹல்லா பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், உலமாக்கள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# வாழைக் குலை வெட்டச் சென்றவர் காட்டு யானை தாக்கி உயிரிழப்பு

அம்பாறை - உஹன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திஸ்ஸபுர பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என உஹன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் உஹன, திஸ்ஸபுர பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சம்பவத்தன்று, உயிரிழந்த நபர் தனது வீட்டின் பின்புறத்தில் உள்ள வாழை மரத்திலிருந்து குலை ஒன்றை வெட்டச் சென்றபோது காட்டு யானை தாக்கி படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என உஹன பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2025இல் வெளியிடப்பெற்றது